**DATED : 18.11.2025 OS.No. 440/2024**

**பெயர் - திரு** ஞானசேகரன் **(Pw2)**

**1ம் பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை -**

1) என்னுடைய ஊர் என்னவென்றால் தையல்குணாம்பட்டினம் ஆகும். நான் என்ன தொழில் செய்கிறேன் என்றால் ரியல் எஸ்டேட் தரகராக தொழில் செய்கிறேன். அதற்கு உரிமம் வைத்துள்ளேன். வாதி தனசிங் எனது உறவினரா? என்றால் இல்லை. அவர் எனது ஊர்காரர்.

2) எனக்கு நீதிமன்றத்திலிருந்து சாட்சியம் அளிக்க அழைப்பானை வந்ததா? என்றால் வந்தது. வாதி மீண்டும் சம்மன் வரவில்லை. வாதி அழைத்ததால் சாட்சியம் அளிக்க வந்ததாக கூறுகிறார்.

3) வாதி என்ன பரிகாரம் கோரி இவ்வழக்கை தாக்கல் செய்துள்ளார் என்ற விவரம் எனக்கு தெரியுமா? என்றால் தெரியும். என்ன பரிகாரம் கோரியுள்ளார் என்றால் வாதி தன்னுடைய இடத்தை 1ம் பிரதிவாதி எடுத்துக் கொண்டதாக கூறி வழக்கு தாக்கல் செய்துள்ளார்.

4) வாதி தன்னுடைய இடத்தை எடுத்துக் கொண்டதாக கூறும் நிலையில் அதன் புல எண் தெரியுமா? என்றால் தெரியாது. அதன் விஸ்தீரனம் 30க்கு 60 ஆகும். அதன் சக்குபந்தி தெரியாது. விஸ்தீரனம் எவ்வாறு தெரியும் என்றால் நீதிமன்றத்தில் இருந்து அளந்த போது எனக்கு தெரியும்.

5) வழக்கு சொத்தை எப்போது வாதி கிரயம் வாங்கினார் என்றால் 2004 ல்கிரயம் வாங்கினார். 1ம் பிரதிவாதி அவரது சொத்தை எப்போது கிரயம் வாங்கினார் என்று எனக்கு தெரியுமா? என்றால் தெரியாது.

6) நான் பல்வேறு வழக்குகளில் சென்று சாட்சியம் அளிப்பது வழக்கம் என்று சொன்னால் சரியல்ல. இது தான் நான் சாட்சியம் அளிக்கும் முதல் வழக்காகும். வாதி கிரயம் வாங்கிய ஆவணத்தில் நான் சாட்சி கையொப்பம் ஏதும் செய்யவில்லை என்றால் சரிதான்.

7) 1 ம் பிரதிவாதி வேனுகோபாலை எனக்கு தெரியுமா? என்றால் தெரியாது. 2024 ல் வீடு கட்டும் போது தகராறு ஏற்பட்ட போது தான் எனக்கு தெரியும். அதற்கு முன்பு அவரை எனக்கு தெரியாது.

8) 1 ம் பிரதிவாதி வேனுகோபால் யாரிடம் சொத்தை கிரயம் வாங்கினார் என்று எனக்கு தெரியாது என்றால் சரிதான். வாதி தனசிங் இடத்திற்கு முன்புறம் உள்ள இடம் யாருடையது என்று எனக்கு தெரியாது என்றால் சரிதான்.

9) 1 ம் பிரதிவாதி கிரயம் வாங்கி, பட்டா மாற்றம் செய்த போது RDO விசாரணை செய்த விவரம் எனக்கு தெரியுமா? என்றால் தெரியாது.

10) இந்த வழக்கு தாக்கல் செய்ததே நான் தான் எனவும், என் மூலமாக தான் வாதி தனசிங் இந்த வழக்கையே தாக்கல் செய்துள்ளார் என்றால் சரிதான். இந்த வழக்கு தாக்கல் செய்த பின்னிட்டு நான் வாதியுடன், இந்நீதிமன்றத்திற்கு நான் 10 வாய்தாவிற்கு வந்துள்ளேனா? என்றால் சுமார் 5 முறை வந்திருப்பேன். என்னை சாட்சியாக போட்டதால் வந்தேன்.

11) எனக்கு இவ்வழக்கை பற்றி எதுவும் தெரியாது எனவும், வாதி என்னுடைய ஊர்காரர் என்பதால் அவருக்கு அனுசரைனையாக அவர் கூறியதை கூறிய படி சாட்சியம் அளிக்கிறேன் என்று சொன்னால் சரியல்ல.

**மறு விசாரணை - இல்லை**